பெருநகர சென்னை மாநகராட்சி
செய்தி வெளியீடு

செ.வெ.எண் : 206 நாள்: 19.12.2018

**பெருநகர சென்னை மாநகராட்சி இராயபுரம் மண்டலம், ஜி.எம்.பேட்டையில் 20.12.2018 அன்று சுனாமி முன்னெச்செரிக்கை ஒத்திகை நடைபெறவுள்ளது.**

தமிழ்நாடு மாநில பேரிடர் மேலாண்மை ஆணையம், கடலோர பகுதிகளில் சுனாமி முன்னெச்சரிக்கை மாதிரி பயிற்றி மேற்கொள்ள அறிவுறுத்தியுள்ளது. இதன்பொருட்டு, பெருநகர சென்னை மாநகராட்சியானது மத்திய மாநில அரசுகள் சார்ந்து பல்வேறு துறைகளை ஒருங்கிணைத்து, 20.12.2018 அன்று காலை 8.30 மணியளவில் பெருநகர சென்னை மாநகராட்சி, இராயபுரம் மண்டலம், வார்டு–50ல் உள்ள கடலோர பகுதியான ஜி.எம்.பேட்டையில் சுனாமி முன்னெச்சரிக்கை ஒத்திகை பயிற்சி மேற்கொள்ள உள்ளது.

எனவே, 20.12.2018 (வியாழக்கிழமை) அன்று ஜி.எம்.பேட்டையில் நடைபெறும் சுனாமி எச்சரிக்கை ஒத்திகை பயிற்சியானது ஒரு மாதிரி ஒத்திகை பயிற்சி மட்டுமே ஆகும். இதுகுறித்து பொதுமக்கள் எவ்வித அச்சமோ / பீதியோ அடைய தேவையில்லை என தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.

**செய்தி வெளியீடு: இணை இயக்குநர்/மக்கள் தொடர்பு அலுவலர்**
**பெருநகர சென்னை மாநகராட்சி**